---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷா கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்து செயப்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும். முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க இலங்கை கம்பனிச் சட்டம் | | | |
| (i) பிரிவு 131(1) | அனைத்து கம்பனிகளும் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒருமுறை ஏனும் வருடாந்த அறிக்கை (Annual Return) கம்பனிப் பதிவாளருக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும், 2019 ஆண்டின் பின்னர் வருடாந்த அறிக்கை (Annual Return) கம்னிப் பதிவாளருக்க வழங்கப்பட்டிருக்கவில்லை ல. | அரை அரச நிறுவனம் ஒன்றென இடையிடையே பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் மாற்றமடைவதனால் பணிப்பாளர் சபை அங்கத்தவர் இறந்த போது அதற்குரிய அலுவல்கள் சிக்கலடைவதன் காரணத்தினால் இந்தத் தாமதம் ஏற்பட்டிருந்ததெனவும், 2015 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான நிலுவை | கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | Annual Return கம்பனிப் பதிவாளருக்கு தற்போது அனுப்பப்பட்டு முடிவடைந்துள்ளதுடன், 2025 ஆண்டு வரையான மீதியான Annual Return இவ்வருடம் முடிவடைவதற்கு முன்னர் உரிய படிவத்தின் பிரகாரம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| | (ii) பிரிவு 223(2)(அ) மற்றும் (ஆ) | கம்பனிச் செயலாளர் அல்லது பணிப்பாளர்கள் தொடர்பாக மாற்றங்கள் ஏற்பட்ட போது அந்த மாற்றங்களை கம்பனிச் செயலாளர் அல்லது பணிப்பாளர் தொடர்பான பதிவேட்டில் அடங்கியுள்ள விபரங்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்ட போது அந்த மாற்றங்களை பதிவு செய்வதற்காக உரிய படிவத்தின் படி பதிவாளருக்கு அனுப்புவதற்கு பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும், 2019 ஆண்டின் பின்னர் ஏற்பட்டிருந்த மாற்றங்கள் தொடர்பாக சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் | | | |
| | (i) உபபிரிவு 38(1) இன் பந்தி (இ) | நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றதென | நிதிக் கட்டுப்பாட்டுக்காக FR 135 இன் படி நிதியாண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் குறிப்பிட்ட | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன், அந்த முறைமையின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொண்டு அதன்படி, முறைமை செயற்திறனுடன் மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | வருடத்தின் Delegation of Financial control/ Power தலைவர் உட்பட பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளல் கம்பனியினால் மேற்கொள்ளப்படுகின் றதெனவும், ஆக்கபூர்வமாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கண்காணிப்பின் கீழும் கம்பனியினுள் செயற்படுத்தப்படுவதுட ன், மேலும் தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரகாரம் மேலதிக அறிவுரைகள் தேசிய கணக்காய்வு அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு ம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என. | |
| | (ii) உபபிரிவு 38(2) | சட்டத்தின் உபபிரிவு 38(1)பந்தி (இ) இன் பிரிகாரம் மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பபிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி, செயற்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் viii இன் பிரிவு 10.1 மற்றும் அத்தியாயம் xii இன் பிரிவுகள் 7.2 மற்றும் 7.3, 2009 | பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு வார இறுதியில் மற்றும் அரச விடுமுறை நாட்களில் கடமையாற்றுவதற்காக அவ்வாறு கடமையாற்றிய | இலங்கை திரிபோஷா கம்பனி, கம்பனிச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கம்பனியொன்று மற்றும் அரச தொழில் முயற்சித் திணைக்களத்தினால் | தாபனக் கோவையின் மற்றும் பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஏப்ரல் 16 திகதிய இலக்கம் 09/2009 மற்றும் 2013 ஒக்தோபர் 07 திகதிய 21/2013 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கைகள் | ஒவ்வொரு நாளுக்குமாக இணைந்த மாதாந்த சம்பளத்தின் 1/20 இற்கு சமமான தொகையொன்று பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன், அதற்காக ஒரு நாளைக்கு 08 மணித்தியாளங்களுக்கு குறையாத காலமொன்று கடமையாற்ற வேண்டியதுடன், மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் சம்பளம் என்பன உரிய கடமை நேரத்திற்கு பின்னர் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகளுக்கான காலத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படின், அந்தக் காலம் விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், விரலடையாள அச்சுப் பிரதிகளை பரிசோதனை செய்த போது 08 மணித்தியாள காலம் கடமையாற்றாத உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,464,180 இற்கான விடுமுறை நாள் சம்பளம் செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. மேலும், ஒரு கருமத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டியது ஒரு கொடுப்பனவு / சிறப்புரிமை மாத்திரம் காணப்பட்ட போதிலும், இந்த கொடுப்பனவிற்கு மேலதிகமாக ஞாயிறு தினங்களில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களுக்க | மேற்பார்வையின் கீழுள்ள அரச தொழில் முயற்சியொன்றாக காணப்படுவதனால் பொது நிருவாக சுற்றறிக்கைகள் அல்லது தாபனக் கோவையின் ஏற்பாடுகள் பொருந்தாமையால் ‘அரச தொழிற் முயற்சிகளுக்கான நிருவாகக் கையேடு தயாரித்தல்‘ என்ற தலைப்பில் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பப்பட்டிருந்த 2017/03/15 திகதிய கடிதத்திற்கு கம்பனியினால் 2016 ஆண்டில் தயாரிக்கப்பட்ட மற்றும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ‘நிருவாக விதிக் கோவை‘ 2017/04/25 திகதிய கடிதத்தின் மூலம் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதென வும், 2010 ஆண்டில் திரிபோஷா நிகழ்ச்சித் திட்டம் சீ டீ சீ சர்விஸஸ் கம்பனியின் கம்பனியின் முகாமைத்துவத்திலிருந்து சுகாதார அமைச்சுக்கு உரித்தாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் 1950 இன் 43 ஆ் இலக்க தொழில் பிணக்குகள் சட்டத்தின் பிரிவு 12(1) இன் கீழ் கூட்டு உடன்படிக்கையொன்றிற்கு / நடுத்தீர்ப்பு பத்திரம் ஒன்றிற்கு இணக்கம் |

ாக ரூபா 473,614 இற்கான விடுமுறை நாள் கொடுப்பனவு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. அதேபோல், பஞ்ஞாங்க மாதம் ஒன்றில் 02 நாட்களுக்கு மிகையான நாட்கள் சேவையில் ஈடுபடுத்த வேண்டிய தேவை ஏற்படின் அதற்காக உரிய அமைச்சுச் செயலாளரின் பூர்வாங்க அங்கீகாரம் தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி செயற்பட்டிருக்கவில்லை.

தெரிவித்துள்ளதுடன், அதன்படி, இலங்கை திரிபோஷா கம்பனியின் முகாமைத்துவத்தினால் மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவிற்காக முன்னர் காணப்பட்ட செய்முறையின் படி செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது என, 1954 இன் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் படி மற்றும் மேற்கூறிப்பிடப்பட்ட நடுத்தீர்ப்பு நிபந்தனைப் பத்திரத்திற்கு இணங்க மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவு செலுத்தப்படுகின்றதெனவும், இங்கு சிரேஷ்ட மட்ட முகாமைத்துவ உத்தியோகத்தர்களும் சம்பளம் பெற்றுக்கொள்வது கம்பனியின் நிதியத்தின் மூலமாக காணப்படுவதனால் அவர்களும் கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் படி அலுவலக உத்தியோகத்தர்களின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றதெனவும், அலுவலக உழியர்களுக்கு வார நாட்களிலும் 08 மணித்தியாளங்களை மிகையான கடமைக்காக மணித்தியாளம் 1:1.5 ரேட்டில் மேலதிக நேரம் உரித்தான போனதிலும், சிரேஷ்ட மட்ட

உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறு உரித்தாகவில்லை எனவும், சேவை தேவைப்பாட்டின் படி சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் விடுமுறை நாட்களில் இடையிடையே கடமை நிலையத்திற்கு சமூகமளித்தல் / வெளிக் கடமைகளுக்காக பங்குபற்றல் மேற்கொள்ளப்படுகின்றமையால் விடுமுறை நாட்கள் மற்றும் பதில் விடுமுறை நாள் கொடுப்பனவு அதன்படி, மேற்கொள்ளப்படுகின்றதெனவும், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், கம்பனியின் அனைத்துப் பிரிவுகளும் அடங்கக்கூடியவாறு செயற்பாட்டுக் கைநூலில் மற்றும் நிருவாக விதிக் கோவையில் மேற்கூறிய பிரிவுகள் உட்படுத்தப்பட்டுள்ளதுடன், அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வேண்டப்பட்டுள்ள தகவல்களும் அந்தத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதெனவும், 24 மணித்தியாளங்களிலும் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்ற உணவு உற்பத்திக் கம்பனி ஒன்றாக காணப்படுவதனால் ஒரு மாதத்திற்கு 02 நாட்கள் என வரையறுத்தல் சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்களிட

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ம் சேவைகள் பெற்றுக்கொள்ளல் செய்முறைசார் சாத்தியமற்றதெனவும், அதன் காரணமாக கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையுடன் கலந்துரையாடி தேவையான தீர்மானங்கள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியசரின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 880 | அரச பணம், பண்டங்கள் பெற்றுக்கொள்ளல் அல்லது பொறுப்பாக இருந்தல் அவ்வாறு இன்றேல் பண்டங்கள் விநியோகித்தல் தொடர்பாக நிருவாக ரீதியாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களும் அரச கணக்கிற்குரிய உறுதிச் சீட்டுக்கள், சான்றுபடுத்தப்பட்ட காசோலைகள் கையொப்பமிடுவோரும் தமது கடமைகளை நேர்மையாக நிறைவேற்றப்படுகின்றதெ தன 612 ஆவது அதிகாரமாகிய அரச உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்க வேண்டியிருந்த போதிலும், பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் தொகுதிகள் தொடர்பாக விபரங்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மற்றும் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) அரச தொழில் முயற்சிகளை நெறிப்படுத்தல் தொடர்பான 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரச தொழில் முயற்சிகளுக்கான தாபன ரீதியான வழிகாட்டல் கோவை மற்றும் கைநூல் | | | |
| (i) வழிகாட்டலின் அத்தியாயம் 2 பந்தி 2.3 | குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக செயல் நடவடிக்கைத் திட்டத்துடன், வருடாந்த பாதீடு அடங்கிய மூலோபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அந்த திட்டம் உரிய வரிசையமைச்சு செயலாளர் ஊடாக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்டிருக்காத செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தத் திட்டம் வழிகாட்டல் அறிவுரைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை திரிபோஷா கம்பனியின் அடிப்படை குறிக்கோளாவது சுகாதார அமைச்சினால் வழங்கப்படுகின்ற நலன் பெறுவோர் மதிப்பீட்டிற்காக திரிபோஷா உற்பத்தி செய்து குறிப்பிட்ட நலன் பெறுவோருக்கு விநியோகிப்பதற்கு தேவையான இருப்புக்கள் வழங்குவதாகும் எனவும், அதன் காரணமாக குறிப்பிட்ட ஏற்பாடுகள் வழங்கப்படுகின்ற வரிசை அமைச்சான சுகாதார அமைச்சின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படிவத்தின் பிரகாரம் செயல் நடவக்கைத் திட்டம் தயாரித்தல், ஒவ்வொரு காலண்டிற்கு ஒரு முறையும் சுகாதார அமைச்சின் திட்ட அலகிற்கும் நிதியமைச்சின் அரச தொழில் முயற்சிகள் | அரச தொழில் முயற்சிகளுக்கான தாபனம்சார் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திணைக்களத்திற்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் மேற்கொள்ளப்படுகின்றது. தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் சுகாதார அமைச்சு ஊடாக ஏற்பாடுகள் ஒதுக்கப்படுவது திரிபோஷா கொளவனவிற்காகவே காணப்படுவதனால் மற்றும் மூலதன ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் குறிப்பிட்ட படிவத்தின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என. | |
| (ii) | வழிகாட்டலின் அத்தியாயம் 5 பந்தி 3 | பாதீடு செய்யப்பட்ட வருமானக் கூற்றொன்று, பாதீடு செய்யப்பட்ட நிதி நிலைமைக் கூற்றொன்று, பாதீடு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றொன்று மற்றும் மூலதனச் செலவுகள் பாதீடொன்று வருடாந்த பாதீடு தயாரிக்கும் போது உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், வழிகாட்டலின் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு பாதீடு செய்யப்பட்ட வருமானக் கூற்றொன்று, பாதீடு செய்யப்பட்ட நிதி நிலைமைக் கூற்றொன்று, பாதீடு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றொன்று அடுத்த ஆண்டுகளின் பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது சமர்ப்பிக்க முடியும் எனவும், கம்பனியினால் சுகாதார அமைச்சின் வேண்டுகோளின் படி 2024 ஆண்டிற்காக அமைச்சின் படிவத்திற்கு இணங்க மூலதனச் செலவு பாதீடொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கபட்டிருந்த போதிலும், 2021 ஆண்டு முதல் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் எதுவித மூலதன ஏற்பாடுகளும் | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கம்பனிக்கு கிடைத்திருக்கவில்லை என. | |
| (iii) | செயற்பாட்டுக் கைநூலின் அத்தியாயம் 3 பந்தி 3.2(v) | ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தும் போது அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு அங்கீகாரம் இன்றி திரிபோஷா உற்பத்தியின் மூலம் இலக்காகிய கொடுப்பனவொன்றென கம்பனியின் அனைத்து ஊழியர்களுக்கும் மீளாய்வாண்டின் போது ரூபா 22,104,660 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவு முன்னைய ஆண்டின் விற்பனை வருமானத்தின் அடிப்படையில் இலாபத்தின் சதவீதம் ஒன்றாக ரூபா 12,687,147 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அந்த விற்பனவு வருமானத்தின் சதவீதம் ஒன்றென கொடுப்பனவு செய்திருந்தமையால், முன்னைய ஆண்டை விட 74 சதவீதத்தினால் மிகையான பெறுமதியொன்று செலுத்தப்பட்டிருந்தது. அதேபோல், மீளாய்வாண்டின் போது திரிபோஷா உற்பத்தியை அடிப்படையாக கொண்டு புதிய இலக்காகிய கொடுப்பனவு அறிமுகப்படுத்தப்பட்டு அதற்காக ரூபா | கம்பனியின் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கக்கூடியவாறு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், செயற்பாட்டுக் கைநூல் 2024/01/11 திகதி அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும். 2017 – 2020 ஆண்டுகளுக்காக வருடாந்தம் செலுத்தப்பட்டிருந்த இந்த சுபோஷா கொடுப்பனவு 2020 ஆண்டு முதல் மாதாந்த இலக்குக் கொடுப்பனவு என வழங்கப்படுமாறு அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலில் அறிவுரை வழங்கப்பட்டதெனவும், மேலும், ஒட்டுமொத்த உற்பத்தியின் அடிப்படையில் உற்பத்தி இலக்குக் கொடுப்பனவு கொடுக்கப்பட வேண்டும் என 2023 ஆண்டின் நிதிக்கூற்றுக் கணக்காய்வு அறிக்கையின் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தமையால், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது திரிபோஷா உற்பத்தி இலக்குக் கொடுப்பனவு | அரச தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலிற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 19,732,082 தொகை அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்டிருந்தது. திரிபோஷா உற்பத்தியின் மீது இலக்காகிய கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது இலக்காகிய உற்பத்தியின் 60 சதவீத பெறுமதியொன்று மாத்திரம் அடைந்திருந்த போதிலும், இந்த கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | செயற்பாட்டுக் கைநூலில் உட்படுத்தப்பட்டு அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் குறிப்பிட்ட கொடுப்பனவு தொடர்பாக மதிப்பாய்வு அலுவலல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென அறிவிக்கப்பட்டுள்ளது டன், கம்பனியினால் அதற்குரிய தகவல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | |
| (iv) செயற்பாட்டுக் கைநூலின் அத்தியாயம் பந்தி 3.3 | 3 | ஒவ்வொரு பிரிவின் ஊழியர் தேவைப்பாடு மற்றும் அமைப்பு வரைபடம் அடங்கிய மூலோபாய மனிதவள திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி, செயற்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு பிரிவின் ஊழியர் தேவைப்பாடு மற்றும் அமைப்பு வரைபடம் அடங்கிய மூலோபாய மனிதவள திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதுடன், அதற்குரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென. | -மேற்படி- |
| (v) செயற்பாட்டுக் கைநூலின் அத்தியாயம் பந்தி 3.6 | 3 | கம்பனியினால் மூலோபாயத் திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆக்கபூர்வமான செயலாற்றுகை மதிப்பாய்வு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டியதுடன், ஒவ்வொரு ஊழியரினதும், ஆக்கபூர்வ தன்மையினை நெருங்கிய உத்தியோகத்தரினால் மதிப்பாய்வு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வாறு மற்றும் உரிய வழிகாட்டலுக்கு இணங்க ஊழியர் மற்றும் முகாமைத்துவத்திற்கு இடையே பிரதான செயலாற்றுகைச் சுட்டிகள் இனங்கண்டு அதன்படி, செயலாற்றுகை மதிப்பாய்வு மேற்கொள்ளப்படுகின் றதென. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மூன்றாம் மட்டம் மற்றும் சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்களுக்கான ஆக்கபூர்வமான செயலாற்றுகை மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | 2022 ஜனவரி 14 திகதிய 01/2015(ii) இலக்கம் கொண்ட பொது தொழில் முயற்சிகள் சுற்றிக்கை | எரிபொருள் கொடுப்பனவு வழங்கக்கூடியது HM சம்பளத் தொகுதியின் உத்தியோகத்தர்களுக்காக மாத்திரம் என காணப்பட்ட போதிலும், கம்பனியினால் MM சம்பளத் தொகுதி உத்தியோகத்தர் 05 பேருக்கு ஒருவருக்கு ரூபா 20,000 வீதம் ரூபா 1,200,000 தொகை எரிபொருள் கொடுப்பனவாக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | PED/01/2015 சுற்றறிக்கைக்கு இணங்க 100 கிலோ மீற்றர் வரை (Up and Down) தொகுதி போக்குவரத்து வசதிகளுக்காக மத்திய மட்டத்தில் (MM) முகாமையாளர்களுக்கு உரிமை காணப்படுகின்றதெனவும், அதன்படி, கிரய நலன் பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு கம்பனிக்கு செலவாகும் கிரயத்தை கணித்து பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது குறிப்பிட்ட எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்பட்டதெனவும், மேலும், கம்பனியின் செயற்பாட்டுக் கைநூலின் குறிப்பிட்ட பிரிவுகள் உட்படுத்தப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (எ) | 2009 மே 26 திகதிய 39 இலக்கம் கொண்ட முகாதைத்துவ சேவைச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஒக்தோபர் 26 திகதிய 02/2020 இலக்கம் | சம்பளங்கள் மற்றும் படிகள் தீர்மானித்தல் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் குறிப்பிட்ட பதவிக்காக வழங்கப்பட்டிருந்த சம்பளக் குறியீட்டின் கீழ் | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த கம்பனியின் செயற்பாட்டுக் கைநூலின் குறிப்பிட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொண்ட முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பந்தி 02(v) | மாத்திரம் காணப்பட்டதுன், மேலதிக கொடுப்பனவு என மேற்கொள்ளப்படுகின்ற அனைத்துக் கொடுப்பனவுகளுக்குமாக திறைசேரியின் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அவற்றிற்கு இணக்கமின்றி கம்பனியினால் சுபோஷ உற்பத்தி அலுவல்களுக்காக சேர்க்கப்பட்டிருந்த விற்பனை முகாமையாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவொன்று என மாதாந்தம் ரூபா 10,000 வீதம் மீளாய்வாண்டின் போது ரூபா 120,000 தொகையொன்று பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது செலுத்தப்பட்டிருந்தது. | விபரங்கள் உட்படுத்தப்பட்டுள்ளதுடன், தற்போது அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் அதனை மதிப்பாய்வு செய்யப்படுகின்றதெனவும், குறிப்பிட்ட முகாமையாளர்கள் சுபோஷா வணிகக் குறியீட்டினை விற்பனை மற்றும் மேம்படுத்துவதற்காக சேர்ப்பக்கப்பட்ட போதிலும், திரிபோஷா விநியோத்தலில் நேரடி மேற்பார்வையொன்றும் மேற்கொள்ளப்படுகின்றதென. | |
| (ஏ) | 2013 மார்ச் 28 திகதிய DMS/E4/13/08/413/1 இலக்கம் கொண்ட முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் கடிதம் | கம்பனிக்காக 2010 திசெம்பர் 02 திகதி அங்கீகரிக்கப்பட்ட அனைத்துப் பதவிகளுக்குமாக 30 ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி தயாரிக்கப்பட்டிருந்த தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அத் திகதியின் பின்னர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், முகாமைத்துவச் சேவை | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை (SOR) அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு தேவையான கடிதங்கள் உரிய கடிதத்தின் பிரகாரம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த முகாமையாளர் (விற்பனை மேம்பாடு), கணக்கு உத்தியோகத்தர், பொறியியல் சேவை உத்தியோகத்தர், மருத்துவ உத்தியோகத்தர் மற்றும் தாதி உத்தியோகத்தர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன், அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையொன்றின்றி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | நிதி, பொருளாதார உறுதிப்பபாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2024 ஜனவரி 10 திகதிய மற்றும் 01/2024 இலக்கம் கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பந்தி 11.6 | முறையான அங்கீகாரம் இன்றி அரச நிதியத்தினைப் பயன்படுத்தி காப்புறுதித் திட்டங்கள், சலுகைக் கடன் திட்டங்கள் மற்றும் மருத்துவ பில் பத்திரங்கள் மீளளிப்பு செய்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள செயற்படுத்தக்கூடாது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இலங்கை திரிபோஷா கம்பனியின் ஊழியர்களுக்காக சுபோஷா உற்பத்தி விற்பனை இலாபங்கள் பயன்படுத்தி ரூபா 5 மில்லியன் உச்ச மட்ட அளவிற்கான மருத்துவ காப்புறுதி நிதியமொன்று நிறுவுவதற்காக 2019 ஜூலை 01 திகதிய 2019/02 இலக்கம் கொண்ட பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கு முரணாக 2024/2025 ஆண்டிற்குரிய காப்புறுதித் | கம்பனியின் நிரந்தரப் பதவியணியினருக்கு மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு 2019 ஆண்டு முதல் சுகாதார காப்புறுதித் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டதெனவும், ஆரம்பத்தில் ரூபா 5 மில்லியன் வரையறையில் இதனை செயற்படுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்ததெனவும், மருத்துவ பில் பத்திரக் கட்டணம் மற்றும் உள்ளகச் சிகிச்சைக் கட்டணம் உயர்வடைந்த காரணத்தினால் மற்றும் கம்பனி ஊழியர்களின் உரிமை கோருதல் அதிகரித்தமையால் 2023/08/01 திகதி முதல் வெளி நோயார் நலன்கள் வருடாந்தம் ரூபா | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | திட்டமொன்றிற்காக இலங்கை காப்புறுதிக் கம்பனிக்கு ரூபா 9,643,892 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 20,000 இற்கான வரையறையும் உள்ளக சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கான நலன்கள் ரூபா 200,000 வரை அதிகரித்தல் மேற்கொள்ளப்பட்டதெனவும், கம்பனியின் அனைத்துச் சேவைத் தொகுதிகளுக்கும் சமமான நலன்களை வழங்கும் இநத மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்காக அரச நிதியமொன்று பயன்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை என. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 371,268,008 இற்கான இலாபமொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 555,406,517 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 184,138,509 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு வருமானம் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் ரூபா 430,000,000 தொகை எனக் குறிப்பிடப்பட்டுள்ள 6 ஏக்கர் 3 ரூட் 19.7 பர்சஸ் தொகைக்கான கம்பனி நிறுவப்பட்டுள்ள காணியின் உரிமை கம்பனியின் பெயரில் காணப்படாததுடன், சிக்கலின்றிய உரிமையொன்று காணப்படாத இந்தக் காணியில் ரூபா 178,114,948 இற்கான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்ததெனவும், மீளாய்வாண்டின் போது காணிக்காக ஆக்கவளத்தன்மை வரி ரூபா 18,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், காணியின் உரிமையை | CTC சர்விஸ் கம்பனியின் மூலம் முகாமைத்துவம் மேற்கொண்ட பின்னர் 2010 ஆண்டின் போது சுகாதார அமைச்சிற்கு இணைக்கப்பட்ட முழுமையாக அரசிற்கு உரிமையான கம்பனி ஒன்றென கூட்டிணைக்கப்பட்டு நிதியமைச்சின் மூலம் உரித்தாக்கிய சந்தர்ப்பத்திலும், குறிப்பிட்ட காணியின் பெறுமதி அரச விலை மதிப்புத் திணைக்களத்தினால் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததெனவும், இலங்கை திரிபோஷா கம்பனியின் பங்கு மூலதனம் (ரூபா 304.6 மில்லியன் தொகையிலும்) இந்தக் | இந்தக் காணியை விரைவாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனியின் பெயருக்கு மாற்றுவதற்கு எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | காணியின் பெறுமதி உள்ளடங்கியிருக்கின்றது எனவும், மேலும், காணியின் வரைபின் படி இது அரசுக்கு சொந்தமான காணியொன்றென குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், மீண்டும் நில அளவையொன்று கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன்படி, அரச காணியொன்றாக காணப்பட்டமையால் ஆக்கவளத்தன்மை வரி செலுத்தப்பட்டதெனவும், காணி உறுதி தொடர்பாக எதிர் காலத்தில் பணிப்பாளர் சபையுடன் கலந்துரையாடிய பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் என. | |
| (ஆ) | உத்தேச சைலோ முறைமை நிர்மாணிப்பதற்காக உலக உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் (WFP) கீழ் ரூபா 192,091,525 தொகை 2021 ஆண்டின் போது வழங்கியிருந்ததுடன், அந்தப் பணம் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதன் முதிர்வடைந்த பெறுமதி ரூபா 255,537,214 தொகையாக காணப்பட்டதுடன், கணக்காய்வுத் திகதி வரை அந்த நிதியம் வழங்கப்பட்ட குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | சைலோ செயற்திட்டத்திற்கான ஆரம்ப மதிப்பீடு ரூபா 800 மில்லியன் தொகை எனவும், அந்த செயற்திட்டத்தை 2021 ஆண்டில் செயற்படுத்துவதற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டது எனவும், அரச வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்ட போதும் இலங்கையில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமையின் முன்னிலையில் குறிப்பிட்ட ஏற்பாடுகள் கம்பனிக்கு கிடைக்கப்படவில்லை எனவும், இதன் காரணமாக உலக உணவு அமைப்பினால் (WFP) மூலம் சோளக் கொள்வனவு செய்வதற்கான பில் பத்திரங்களை மீளளிப்பு செய்வதற்காக பல தடவைகளில் வழங்கியிருந்த மானியமாகிய ரூபா 192,091,525 இற்கான தொகையினை எதிர் கால சைலோ செயற்திட்டத்திற்காக பயன்படுத்தும் படி தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டதெனவும், உலக உணவு அமைப்பினால் (WFP) 2026 – 2028 மூலதனத் திட்டத்தின் மூலம் மீதியான ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை திரிபோஷா கம்பனியுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | நிதியம் வழங்கப்பட்ட குறிக்கோளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திரிபோஷா கம்பனியின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக்கூடிய Anderson I மற்றும் Anderson II என 02 இயந்திரங்கள் காணப்படுகின்றதுடன், அதன் கொள்திறன் முறையே 1800 Kg/hr (Blends 2) மற்றும் 3600 Kg/hr (Blends 4) ஆக காணப்பட்டது. அதன்படி, கம்பனியின் மொத்த இயந்திரக் கொள்திறன் மணித்தியாளத்திற்கு 5400 கிலோ கிராம் தொகையாக காணப்பட்டது. | | |
| (i) Anderson II இயந்திரத்தின் மூலம் 2024 ஆண்டு திட்டமிடப்பட்ட 278 நாட்களில் 24019 மெட்ரிக் தொன் உற்பத்தி செய்ய முடியுமாக இருந்த போதிலும், கம்பனியினால் Anderson II இயந்திரத்தின் மூலம் ஒரு மணித்தியாளத்திற்கு 2250 கிலோ கிராம் கொள்திறன் ஒன்றின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது 14,560 மெட்ரிக் தொன் (கழிவு உட்பட) உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், மீளாய்வாண்டின் உள்ளவாறான உற்பத்தி 8636 மெட்ரிக் தொன்களாக காணப்பட்டது. அதன்படி, இந்த இயந்திரம் குறை பயன்பாட்டு மட்டத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | அன்ரஸன் II இயந்திரத்திறன் Machine Capacity 3,600 Kg / hr ஆக காணப்பட்ட போதிலும், 2024 ஆண்டின் திரிபோஷா தேவைப்பாட்டின் படி மணித்தியாலத்திற்கு 2250 Kg கொள்திறனின் கீழ் உற்பத்தி திட்டமிடப்பட்டிருந்ததென. எனினும், சோளம் தேவையான எண்ணிக்கை மற்றும் தேவையான சந்தர்ப்பத்தில் கிடைக்காமையின் காரணத்தினால் திட்டமிடப்பட்ட உற்பத்தியினை மேற்கொள்ள முடியாமல் போனது என. சோளத்தில் காணப்படுகின்ற அப்லடொக்ஸின் மட்டம் காரணமாக 03 வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்கான திரிபோஷா வழங்கதலும் மேற்கொள்ளப்படவில்லை என. | இந்த இயந்திரங்கள் உச்சமட்ட கொள்திறனுடன் பயன்படுத்துவதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (ii) மீளாய்வாண்டின் உற்பத்தித் திட்டம் தயாரிக்கும் போது Anderson I இயந்திரத்தை கவனத்தில் எடுத்திருக்காததுடன், இந்த இயந்திரம் மேற்கூறிய நாட்களில் ஒன்றாக செயற்படுத்தப்பட்டிருந்தால் மீளாய்வாண்டின் போது 6005 மெட்ரிக் தொன் உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்த போதிலும் 2024 ஆண்டு ஜூலை 16 திகதி முதல் 31 திகதி Anderson I இயந்திரத்தை பயன்படுத்தி 382 மெட்ரிக் தொன்கள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. மேற்கூறிய விடயங்களின் படி 11.5 மாதங்கள் இந்த இயந்திரம் விளைவற்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | அன்ரஸன் II இயந்திரத்திற்காக மாத்திரம் பதவியணியினர் காணப்பட்டனர் எனவும், எனினும், அன்ரஸன் II இயந்திரத்தின் பராமரிப்பு அலுவல்களின் போது அன்ரஸன் II இயந்திரத்தின் பதவியணியினரை பயன்படுத்தி அன்ரஸன் I இயந்திரத்தை பயன்படுத்தி உற்பத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என. | -மேற்படி- |
| (ஆ) | மீளாய்வாண்டின் உற்பத்தித் திட்டத்தின் படி உற்பத்தியில் 3 சதவீதம் கழிவொன்று மேற்கொள்ளப்படுகின்றன என கணித்து ஆண்டின் போது 14,123 மெட்ரிக் தொன்கள் உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் உள்ளவாறான மொத்த உற்பத்தி எண்ணிக்கை 8636 மெட்ரிக் தொன் ஆக காணப்பட்டமையால் எதிர்பார்த்த எண்ணிக்கையில் 61 சதவீதம் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. மேலும், மாதாந்த உற்பத்தித் திட்டத்துடன் இணக்கஞ் செய்த போது உள்ளவாறான உற்பத்தி 22.5 சதவீதம் முதல் 98.2 சதவீத வரையான வீச்சில் காணப்பட்டது. | 2024 ஆண்டின் போது பொதி செய்யும் பிரிவில் பொறுத்தப்பட்டிருந்த 03 பழைய பயிபர் தொட்டிகளை அகற்றி புதிய 03 கரையில் உருக்கு தொட்டிகள் பொறுத்துதல் மற்றும் உரிய எண்ணிக்கையில் தரமான சோளம் பெற்றுக்கொள்ள முடியாமையால் உற்பத்தியை முறைப் பிரகாரம் பேணுவதற்கு முடியாமல் போன காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டது என. | வருடாந்த உற்பத்தி இலக்கினை அடைவதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது திரிபோஷா கம்பனியினால் 278 இயந்திர நாட்கள் உற்பத்தி அலுவல்கள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் 188 நாட்கள் மாத்திரம் உற்பத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி, 90 நாட்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன், உற்பத்தி செய்முறையின் போது மூலப்பொருள் என சோளத் தேவைப்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் | தரமான மூலப் பொருட்கள் கிடைக்காமையால் அடிக்கடி இயந்திரங்களை நிறுத்த நேரிட்ட காரணத்தினால் இயந்திரத்தின் உற்பத்திக் காலம் குறைவடைதல் நேரிடுகின்றது எனவும், தரமான மூலப்பொருட்கள் முறைப் பிரகாரம் பெற்றுக்கொள்ளக் கூடிய இயலுமை காணப்பட்டால் இயந்திரத்தின் உற்பத்திக் கொள்திறனின் படி தொடர்ச்சியாக உற்பத்தி செய்வதன் மூலம் 2024 இன் போது மீளாய்வு செய்யப்பட்ட | இந்த இயந்திரங்களின் உச்ச மட்ட கொள்திறனை பயன்படுத்துவதற்கா க ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதல், பால்மா உற்பத்தி மேற்கொள்ள முடியாமல் போதல் மற்றும் இயந்திரங்கள் செயற்படாமை ஆகிய காரணங்களினால் 80 நாட்கள் உற்பத்தியிலிருந்து விளகியிருந்ததென கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், மீதியான 10 இயந்திர நாட்களில் இயந்திர மணித்தியாளங்களின் இழப்புக்கான காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் திட்டமிட்ட உற்பத்தியாகிய 14,123 மெட்ரிக் தொன் மற்றும் உள்ளவாறான உற்பத்தி 8,636 மெட்ரிக் தொன் காணப்பட்டதுடன், 5,487 மெட்ரிக் தொன் உற்பத்தி ஒன்றினை நெருங்குவதற்கு முடியாமல் இருந்தது. அவ்வாறாயினும், பல்வேறு காரணங்களினால் நெருங்க முடியாமல் போன உற்பத்தி எண்ணிக்கை 4,334.1 மெட்ரிக் தொன் என கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 1,152.9 மெட்ரிக் தொன்களுக்கான உற்பத்தியை நெருங்குவதற்கு முடியாமல் போனதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உற்பத்தியினை நூறு சதவீதமாக ஆக்குவதற்கு இயலுமாக இருக்கும் என. | |
| (ஈ) | மீளாய்வாண்டின் உற்பத்தித் திட்டத்தின் படி எதிர்ப்பார்த்த உற்பத்தி 14,123 மெட்ரிக் தொன்களாக காணப்பட்டதுடன், அவற்றில் 11,328 மெட்ரிக் தொன்கள் (80.2%) திரிபோஷா உற்பத்தி மற்றும் 2,795 மெட்ரிக் தொன்கள் (19.79%) சுபோஷா உற்பத்திக்காக திட்டமிடப்பட்ட போதிலும், 2024 ஆண்டின் மொத்த உற்பத்தியாகிய 8,636 மெட்ரிக் தொன்களில் 6,294 மெட்ரிக் தொன்கள் (73%) திரிபோஷா மற்றும் சுபோஷா 2,342 மெட்ரிக் தொன்கள் (27%) உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. | 2024 உற்பத்தித் திட்டத்தில் 20 சதவீதம் என சுபோஷா உற்பத்தி எதிர்வு கூறப்பட்டிருந்ததுடன், உள்ளவாறான உற்பத்தி மொத்த உற்பத்தியின் 27 சதவீதம் வரை அதிகரித்திருந்த போதிலும், குறிப்பிட்ட ஆண்டு சுபோஷா கேள்வியில் 40 சதவீத எண்ணிக்கையொன்று மாத்திரம் கம்பனியினால் விற்பனை முகவர்கள் மூலம் சந்தைக்கு வழங்கப்பட்டிருந்தது என. | வருடாந்த திரிபோஷா தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அதேபோல் மீளாய்வாண்டின் உற்பத்தித் திட்டத்தின் படி மாதாந்த மொத்த உற்பத்தியில் 8 சதவீதம் முதல் 36 சதவீதம் வரையான பெறுமதி வீச்சில் சுபோஷா உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் உள்ளவாறான சுபோஷா உற்பத்தி 17 சதவீதம் முதல் 45 சதவீதம் வரையான கூடிய சதவீதம் ஒன்றினை உற்பத்தி செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்ததென அவதானிக்கப்பட்டது. மேலும், கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருந்த உற்பத்தித் திட்டத்தின் படி சுபோஷா உற்பத்தி மற்றும் கெலரி பிஸ்கட் இற்காக பயன்படுத்தப்படுகின்ற உற்பத்திக்காக தேவையான மூலப் பொருள் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருக்காமையால் அந்த உற்பத்தித் தேவைப்பாட்டுக்காக தேவையான மூலப் பொருள் எண்ணிகையை இனங்காண முடியாமல் இருந்தது. அதன்படி, திரிபோஷா தேவைப்பாட்டிற்கு மதிப்பீடு செய்யப்பட்ட மூலப் பொருட்கள் சுபோஷா மற்றும் கெலரி பிஸ்கட்களுக்காக பயன்படுத்தப்பட்டமையால் கம்பனியின் அகவிதியின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | தரமான மூலப் பொருள் (சோளம்) முறைப் பிரகாரம் பெற்றுக்கொள்ள முடியாமையினால் சுபோஷா மற்றும் கெலரி பார்கள் கேள்விக்கு ஏற்றவாறு வழங்கலொன்று சந்தைக்கு விநியோகிப்பதற்கு முடியாமல் போனது என. இங்கு திரிபோஷா நலன் பெறுவோரின் தரவுகளின் அடிப்படையில் திரிபோஷா உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்கள் எண்ணிக்கை தீர்மானிக்கப்படல் சுபோஷா கேள்வி மற்றும் கடந்த ஆண்டுகளின் விற்பனை தரவுகளின் அடிப்படையில் சுபோஷா உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்கள் தீர்மானிக்கப்படுவது எனவும், தொடர்ச்சியான மூலப் பொருள் வழங்கும் செயற்பாடொன்றினை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதன்படி, சுபோஷா மற்றும் கெலரி பார் உற்பத்தித் திட்டமொன்று விற்பனை பிரிவின் எதிர்வுகூறலின் படி தயாரிக்கப்படுகின்றது என. | -மேற்படி- |
| (ஊ) | இலங்கையில் போசாக்கின்மையை அகற்றி சுகதேகிகளை உருவாக்கும் குறிக்கோளுடன் போசாக்கு தேவையான அனைத்து கற்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார் உட்பட எதிர்பாரத்த நலன் பெறுவோருக்கு திரிபோஷா உற்பத்தி செய்து இலவசமாக விநியோகித்தல் திரிபோஷா கம்பனியின் பிரதான கடமையொன்றாக காட்டப்பட்டிருந்ததுடன், அதன்படி. இலக்காகிய மற்றும் நலன் பெறுவோருக்கு மேலதிக உணவு வேளையொன்றாக திரிபோஷா வழங்கல் தொடர்பான பரிசோதனையின் போது பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகங்கள் (RDHS) உட்பட வைத்தியசாலைகள் மற்றும் 38 | 2024 ஆண்டின் நலன் பெறுவோர் தேவைப்பாட்டின் படி பாதீட்டு உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும், தரமான மூலப் பொருட்கள் முறைப்பிரகாரம் கிடைக்கப் பெறாமையால் உள்ளவாறான உற்பத்தி மற்றும் விநியோகிப்பதற்கான தடைகள் காணப்பட்டதெனவும், மேலும், அனுராதபுர பிரதேச சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தினால் புகையிரத வெகன்கள் மூலம் திரிபோஷா பெற்றுக்கொள்வதை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்ததெனவும். | சுகாதார அமைச்சு மற்றும் திரிபோஷா கம்பனி இணைந்து திரிபோஷா விநியோகத்திற்காக முறையான பொறிமுறையொன்று தயாரித்து செயற்படுத்த வேண்டும். |

நிறுவனங்களுக்காக மீளாய்வாண்டின் போது திரிபோஷா மாஸ்டர் பைகளின் தேவைப்பாடு 493,905 தொகை காணப்பட்டதுடன், ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட மாஸ்டர் பைககளின் எண்ணிக்கை 274,198 தொகையாக காணப்பட்டதுடன், அவை தேவைப்பாட்டின் 55.51 சதவீதத்திற்கு குறைவான பெறுமதியொன்றென அவதானிக்கப்பட்டது. அனுராதபுரம், கண்டி, நுவரெலிய, பேருவளை மற்றும் கழுத்துறை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களின் தேவைப்பாட்டின் மொத்த விநியோகிக்கப்பட்ட சதவீதம் 50 சதவீதத்தை விட குறைவான சதவீதத்தில் காணப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (எ) | கம்பனியின் அகவதியின் படி இலங்கையில் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் போசாக்கின்மையை குறைப்பதற்காக இலங்கையில் அதிகாரமளிக்கப்பட்ட மேலதிக உணவு உற்பத்திக்கான வசதிகள் வழங்குதல் மற்றும் வருடாந்த திரிபோஷா தேவைப்பாட்டை மதிப்பீடு செய்து அவற்றை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மாதாந்த திரிபோஷா விநியோகிக்கும் எண்ணிக்கை தேவைப்பாட்டின் 11.98 சதவீதம் முதல் 103.53 சதவீத வீச்சில் காணப்பட்டதுடன், 2024 ஜூலை மாதம் 11.98 சதவீதம் என குறைந்த சதவீதத்தில் திரிபோஷா விநியோகிக்கப்பட்டிருந்ததுடன, வருடத்தின் 12 மாதங்களில் 06 மாதங்கள் தேவைப்பாட்டின் 50 சதவீதத்தை விட குறைவான சதவீதம் ஒன்றில் திரிபோஷா விநியோகிக்கப்பட்டிருந்தது. மார்ச் மாதத்தில் 103.53 சதவீதம் என தேவைப்பாட்டினை மிகைத்து திரிபோஷா விநியோகிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டிருந்ததென இங்கு முன்னைய மாதங்களுக்குரிய குறை இறுப்புடன் மாதாந்த தேவைப்பாடு | 2024 ஆண்டின் 12 மாதங்களுக்குள் திரிபோஷா தேவைப்பாட்டின் படி திரிபோஷா விநியோகித்தல் மேற்கொள்ளும் போது ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான முதலாவது ஆறு மாதங்களில் திரிபோஷா தேவைப்பாட்டில் 69 சதவீதத்திற்கு அண்மித்தும் மற்றும் 50 சதவீதத்தை மிகைத்தும் திரிபோஷா விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனவும், 50 சதவீதத்தை விட குறைவான சதவீதத்தில் திரிபோஷா விநியோகிக்கப்பட்டிருத்தல் இறுதி ஆறு மாதங்களில் எனவும். திரிபோஷா விநியோகிக்கும் போது மாதந்த தேவைப்பாட்டை மிகைத்து விநியோகித்திருக்காததுடன், 2024 மார்ச் மாதம் விநியோகித்தல் சதவீதம் 104 சதவீதத்திற்கு அண்மித்த பெறுமதியொன்றினை காட்டுவது குறிப்பிட்ட மார்ச் மாதத்தில் பல நிறுவனங்களுக்காக முன்னைய மாதங்களுக்குரிய நிலுவை திரிபோஷா இருப்பு வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையே காரணமாகும் என. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், முறையான திட்டமொன்றுடன் திரிபோஷா உற்பத்தி செய்து விநியோகத்தல் மேற்கொள்ளப்படாமை இதற்கு காரணமாக இருந்ததென அவதானிக்கப்பட்டது. | | |
| (ஏ) | குடும்ப சுகாதார பணிமனையின் இணையதளத்தின் படி 2024 திசெம்பர் மாதம் அளவில் இலங்கையில் குறைந்த பாரமுடைய 05 வருடங்களுக்கு குறைவான பிள்ளைகளின் சதவீதம் 22 சதவீதமாக காணப்பட்டதுடன், உடல் திணிவுச் சுட்டி (BMI) 18.5 இற்கு குறைவாகவும், தாய்மார்களின் சதவீதம் 13.6 சதவீதமாகவும் காணப்பட்டதுடன், குறை பாரமுடைய குழந்தை பிறப்பு எண்ணிக்கை 14.6 சதவீதமாக காணப்பட்டது. இதன்படி, இந்த பெறுமதிகளின் உச்சமட்ட சதவீதம் நுவரெலியா மாவட்டத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது அந்த மாவட்டத்தில் திரிபோஷா விநியோகம் வருடாந்த தேவைப்பாட்டின் 43 சதவீத பெறுமதியினை கொண்டிருந்தது. | இலங்கை திரிபோஷா கம்பனியினால் திரிபோஷா விநியோகிப்பதற்கான தேவைப்பாட்டினை பெற்றுக்கொள்வது சுகாதார அமைச்சின் போசாக்குப் பிரிவிலிருந்து மற்றும் குடும்ப சுகாதார பணிமனையில் இருந்து எனவும், அதன்படி, கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டிருந்த தகவல்கள் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு தேவையான விளக்கமளித்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என. | -மேற்படி- |
| (ஐ) | பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகங்கள் (RDHS) உட்பட வைத்தியசாலைகள் மற்றும் 38 நிறுவனங்களின் மாதாந்த தேவைப்பாட்டின் படி மாதாந்தம் திரிபோஷா விநியோகத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் திரிபோஷா நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த இன்வொயிஸ்களின் நாட்களை பரிசோதனை செய்த போது 01 நாள் முதல் 144 நாட்கள் வரையான வீச்சில் நிறுவனங்களுக்கு இன்வொயிஸ் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததெனவும், 60 நாட்கள் (02 மாதங்கள்) மிகைத்த காலத்திற்கு பின்னர் திரிபோஷா விநியோகித்திருந்த 41 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதெனவும், 90 நாட்கள் (03 மாதங்கள்) மிகைத்திருந்த 09 சந்தர்ப்பங்கள் | 2024 ஆண்டின் நலன்பெறுவோர் தேவைப்பாட்டின் படி பாதீடு செய்யப்பட்ட உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், தரமான மூலப் பொருட்கள் முறைப் பிரகாரம கிடைக்கப் பெறாமையால் உள்ளவாறான உற்பத்தி மற்றும் விநியோகத்திற்காக தடைகள் காணப்பட்டது. சில நிறுவனங்கள் திரிபோஷா பெற்றுக்கொள்வதற்காக வருகை தராததுடன், அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நிறுவனங்களின் மாதாந்த தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்காக நீண்ட காலம் ஒன்று எடுக்கின்றதெனவும், தரமான மூலப் பொருட்கள் முறைப் பிரகாரம் கொள்வனவு செய்வதன் மூலம் கம்பனியின் உற்பத்தித் திட்டத்தை 100 சதவீதத்தை நெருங்கி திரிபோஷா | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன், அதன்படி, திரிபோஷா விநியோகிக்கும் கருமம் மிகவும் வினைதிறனற்ற முறையில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | நலன்பெறுவோருக்கு இருப்புக்களை விநியோகித்தலும் போது 100 சதவீதத்தை நெருங்குவதற்கும் தேவையான குறுகிய கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் சுகாதார அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்களத்துடன் கலந்துரையாடி செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | |
| (ஔ) | தாய்மார்கள் மற்றும் பிள்ளைகளுக்கான மாதாந்தம் மாஸ்டர் பைகளின் தேவைப்பாடு 100 ஐ மிகைக்கும் பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகங்கள் உட்பட 29 நிறுவனங்கள் காணப்பட்டதுடன், அந்த நிறுவனங்களில் தாய்மார்கள் மற்றும் பிள்ளைகளுக்காக வெவ்வேறாக 696 சந்தர்ப்பங்களில் மாதாந்தம் விண்ணப்பிக்கப்படுகின்ற பைகளின் எண்ணிக்கையில் விநியோகிக்கப்பட்டிருந்த மாஸ்டர் பைகளின் எண்ணிக்கை 329 சந்தர்ப்பங்களில் 50 சதவீத்தை விட குறைவான பெறுமதியொன்றினை கொண்டிருந்தது. இவ்வாறு மிகவும் குறைந்த சதவீதத்தில் மாதாந்தம் திரிபோஷா விநியோகத்தின் மூலம் நிறுவனத்தின் திட்டமிடல் மிகவும் பலவீன மட்டத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் உற்பத்திப் பிரிவினால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி கணிக்கப்பட்ட மீளாய்வாண்டின் திரிபோஷா உற்பத்தி 6,294 மெட்ரிக் தொன்கள் மற்றும் சுபோஷா உற்பத்தி 2,343 மெட்ரிக் தொன் ஆக காணப்பட்டதுடன், கணக்குப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி திரிபோஷா மற்றும் சுபோஷா உற்பத்தி முறையே 6,227.14 மெட்ரிக் | உற்பத்திப் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட நாளாந்த உற்பத்தி excel தரவுக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த log sheet தரவுக் குறிப்புக்கள் இடையே இணக்கமின்மைகள் காணப்படுவதுடன், கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த நாளாந்த உற்பத்தி excel தரவுக் குறிப்பு மற்றும் மேற்கூறிய தரவுகளிடையே வித்தியாசம் | இது தொடர்பாக முழுமையான முறையான விசாரணையொன்று மேற்கொண்டு கணக்காய்விற்கு அறிவிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொன்கள் மற்றும் 2,067.3 மெட்ரிக் தொன்களாக காணப்பட்டது. அதன்படி, திரிபோஷா உற்பத்தியில் 66.86 மெட்ரிக் தொன்கள் மற்றும் சுபோஷா உற்பத்தியில் 275.7 மெட்ரிக் தொன்களுக்கான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. அதன்படி, மீளாய்வாண்டிற்காக கணிக்கப்பட்ட இறுதி இருப்பு திரிபோஷா 66.86 மெட்ரிக் தொன்கள் மற்றும் சுபோஷா 275.7 மெட்ரிக் தொன்களும் குறைவாக சித்தரித்துக் காட்டப்பட்டிருந்தது. வரைபு அறிக்கைக்கு கம்பனியின் தலைவரினால் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த பதிலின் படி உற்பத்திப் பிரிவினால் வழங்கப்பட்டிருந்த நாளாந்த உற்பத்தி விரிதாள் தரவுக் குறிப்பு மற்றும் சம்பவத்தாள் தரவுகள் இடையே இணக்கமின்மை காணப்படுகின்றதெனவும், சம்பவப் பத்திரத்தின் படி மொத்த உற்பத்தி 8,508.6 மெட்ரிக் தொன்கள் என குறிப்பிடப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மூலப் பொருள் பயன்பாட்டு வீதாசாரம் மற்றும் அளவுகளை கவனம் செலுத்தும் போது பால்மா பயன்பாட்டின் படி மொத்த உற்பத்தி 8,665.83 மெட்ரிக் தொன்கள் மற்றும் கனிம உப்பு பயன்பாட்டின் படி மொத்த உற்பத்தி 8,533.33 மெட்ரிக் தொன்கள் என அவதானிக்கப்பட்டது. | 127,800 kg தொகை எனவும், அதன்படி, சரியான உற்பத்திப் பெறுமதி 8,508,600 kg தொகை என சரி செய்யப்பட வேண்டும் எனவும். பொதி செய்யும் பிரிவின் மூலம் களஞ்சியப் பிரிவிற்கு வழங்கப்பட்ட முடிவு இருப்பு கணக்கீட்டு அலுவல்களுக்காக பயன்படுத்தப்படுவதுடன், கணக்குப் பதிவுகள் மற்றும் உற்பத்தித் தரவுகள் இடையே வித்தியாசம் 214,130 kg தொகை எனவும், பொதுவாக பொதி செய்யும் இயந்திரத்திற்காக பயன்படுத்தப்படுவதை Auger Filling System (அளவுத் திட்டத்தின் படி நிரப்புதல்) முறைமை ஒன்றுடனான இயந்திரங்களாகும். தானிய வகை உற்பத்திகளின் செறிவு மாற்றமடைவதனால்<br>பொதியொன்றின் பாரம் 10 மற்றும் 15 கிராம்களிலிடையே வீச்சுப் பெறுமதியொன்று சேர்க்கப்பட்டு அதன் தேரிய பாரம் Net Weight சரியாக பேணிச் செல்வதற்காக பயன்படுத்தப்படுகின்றதென. 2024 ஆண்டின் போது மொத்த திரிபோஷா மற்றும் சுபோஷா 13,194,635 பொதிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன்,<br>குறைந்தளவு 131,946 kg ஐ மிகைக்காத எண்ணிக்கையொன்று மொத்த உற்பத்தியில் பகிரப்பட்டுள்ளது என. | |
| (ஆ) | கழுத்துறை சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் திரிபோஷா தேவைப்பாடு மீளாய்வாண்டு முழுவதும். ஒரே அளவான பெறுமதியொன்று காணப்பட்ட போதிலும், பேருவளை சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தின் திரிபோஷா தேவைப்பாடு மாற்றமடைந்திருந்தது. 2024 ஆண்டின் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களின் தேவைப்பாட்டிற்கு ஒப்பாக மார்ச் மாதத்தில் மற்றும் ஏப்ரல் மாதத்தில் குழந்தைகளுக்கான மாதாந்த திரிபோஷா தேவைப்பாடு 570 பொதிகளினால் குறைந்திருந்ததுடன், தாய்மார்களுக்கான மாதாந்த | களுத்துறை தேசிய சுகாதார கல்லூரியின் மூலம் நிறுவகிக்கப்படுகின்ற பேருவளை சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தின் மாதாந்த திரிபோஷா தேவைப்பாடு ஆண்டின் போது பல சந்தர்ப்பங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததென.<br>அதேபோல், மேற்கூறிய திருத்தங்களினால் நேரிட்டிருந்த 2024 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களின் திரிபோஷா இருப்பு வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், அதற்குரிய திரிபோஷா வழங்குதல் 2024 மே மாதத்தில் | சுகாதார அமைச்சு, மாகாண சபை சுகாதார அதிகாரிகள் மற்றும் கம்பனியுடன் ஒழுங்கிணைந்து முறையான தரவு பெற்றுக்கொண்டு அதன்படி, திரிபோஷா விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திரிபோஷா தேவைப்பாடு 2,700 பொதிகளினால் அதிகரிக்கப்பட்டிருந்ததெனவும் அவதானிக்கப்பட்டது. 2024 ஏப்ரல் மாதத்திற்கு ஒப்பாக 2024 மே மாதத்தில் தாய்மார்களுக்கு தேவையான மாதாந்த திரிபோஷா தேவைப்பாடு 2,010 பொதிகளினாலும் குறைந்து குழந்தைகளுக்கான மாதாந்த திரிபோஷா தேவைப்பாடு 2,010 பொதிகளினால் அதிகரித்திருந்தது. அதன்படி, சரியான தரவு அடிப்படையாகக் கொண்டு தத்துருபமாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா என தொடர்பாக கணக்காய்விற்கு சிக்கல் தன்மை காணப்படுகின்றது. | மேற்கொள்ளப்பட்டது எனவும், அந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் சரியான தரவு அடிப்படையில் தத்துருபமான மதிப்பீட்டின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளதா என சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணிமனை மற்றும் போசாக்கு ஒருங்கிணைப்புப் பிரிவின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என. | |
| (இ) | 2024 திசெம்பர் 19 திகதிய 03/146/06 இலக்கம் கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மீது வைப்பு வட்டி வருமானம் மற்றும் கழிவுப்பொருள் விற்பனையின் மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு கம்பனியின் ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 14,674,836 இற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன், திரிபோஷா உற்பத்தி செய்முறையில் ஏற்படுகின்ற வெளியேற்றல்கள் இவ்வாறு கழிவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதுடன், அவ்வாறு கிடைக்கக்கூடிய பணம் சுகாதார அமைச்சுக்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதேபோல், இது தொடர்பான முறையான செய்முறையொன்று தயாரித்து அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. தின வரவுகள் மற்றும் செயலாற்றுகையின் மீது வழங்கப்படுகின்ற கொடுப்பனவு ஒன்றென இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு பெயரிடப்பட்ட போதிலும், தின வரவு தொடர்பாக மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன், | குறிப்பிட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவு தொடர்பாக அனைத்து விபரங்களும் நிருவாக நிதிக் கோவையின் 06 அத்தியாயத்தில் மேலதிக நேரம் மற்றும் ஏனைய கொடுப்பனவின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளனெதவும், அதன் மீது வருடாந்தம் தாயரிக்கப்படுகின்ற ஊக்குவிப்புக் கொடுப்பனவு சுற்றறிக்கைக்கு இணங்க ஊழியர்களின் தின வரவின் தாக்கத்தின் காரணமாக ஆக்கத்திறனை அதிகரித்தல் உற்பத்தி செயலாற்றுகை மற்றும் நிதிச் செயலாற்றுகை காரணமாக 2024 ஆண்டின் போதும் இந்த கொடுப்பனவு வழங்குவதற்காக காரணியாக எடுக்கப்பட்டதெனவும், இந்த ஊக்குவிப்பு தொடர்பாக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு PE/COM/SLTL/EST மற்றும் 2012/11/28 திகதிய கடிதத்தின் பிரகாரம் அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது எனவும், PED 03/2024 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தினவரவு / செயலாற்றுகை மீது செலுத்த வேண்டிய முறை தொடர்பாக PED 08/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் சேமிக்கப்பட்ட விடுமுறைகளின் மீது கொடுப்பனவு செய்தல் | உரிய முறையான அங்கீகாரம் கிடைக்கும் வரை செயற்பாட்டுக் கைநூலில் காட்டப்பட்டுள்ள விடயங்களை செயற்படுத்தக்கூடாதது டன், இதற்காக தேவையான முறையான அங்கீகாரம் பெற்றுக்கொண்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலாற்றுகை மதிப்பாய்விற்காக செய்முறையொன்று தயாரித்திருக்கவில்லை. மேலும், கம்பனியின் சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்களின் தின வரவு மற்றம் வெளிச் செல்லல் தொடர்பாக கம்பனியில் காணப்படுகின்ற சட்டங்கள் விதிகள் கடைபிடிக்காமையால் தின வரவு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கொடுப்பனவில் செல்லுபடியாகும் தன்மை தொடர்பாக கணக்காய்வில் சிக்கலொன்று காணப்படுகின்றது. | தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், மூலப் பொருட்கள் கொள்வனவு செய்தல் உட்பட அனைத்துச் செயற்பாட்டுச் செலவுகளும் திரிபோஷா கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டதனால் உற்பத்தியில் வெளியேற்றப்படும் (கழிவுப் பொருட்கள்) விற்பனை வருமானம் திரிபோஷா கம்பனியின் வருமானம் ஒன்றாக காணப்படுவதுடன், அந்த வருமானமத்தின் அடிப்படையில் கம்பனியினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு VAT மற்றும் SSCL வரிகள் செலுத்துவதும் மேற்கொள்ளப்பட வேண்டியது என. | |
| (ஈ) | திரிபோஷா கம்பனியின் நிறைவேற்று அல்லாத உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட தகுதிகாண் தடை பரீட்சைக்காக சுகாதார அமைச்சினால் பரீட்சை கட்டணத்தை திருத்திக்கொள்வதற்காக பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பப்பட்ட CF/EXSA/03/2023 மற்றும் 2024 மார்ச் 26 திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரேட்களின் அடிப்படையில் தகுதிகாண் தடைப் பரீட்சைக்காக உத்தியோகத்தர்களுக்காக ரூபா 184,975 தொகை செலுத்தப்பட்டிருந்தது. கட்டணம் செலுத்தும் சந்தர்ப்பத்தில் அங்கீகரிக்கப்படாத ரேட்களின் மீது கொடுப்பனவு செய்த காரணத்தினால் ரூபா 110,075 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட ரேட்கள் தொடர்பாக கருத்தொன்று பெற்றுக்கொள்வதற்காக CF/EXSA/03/2023 மற்றும் 2024/03/26 கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரேட்கள் பயன்படுத்தப்பட்டதென. மேலும், அரச தொழில் முயற்சிகளுக்காக பொது நிருவாக அமைச்சின் கடிதங்களை தொடர்புபடுத்த முடியாமையால் திருத்துவதற்காக உத்தேசித்துள்ள ரேட்களுக்காக தலைவரின் அங்கீகாரத்தின் மீது கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது என. | முறையான அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்டுள்ள மிகைக் கொடுப்பனவினை பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்து கணக்காய்விற்கு அறிவிக்கப்பட வேண்டும். |
| (உ) | சீடீசீ கம்பனியினால் சம்பள ஏற்றம் வழங்கும் போது சம்பளம் மற்றும் விடுமுறை பெற்றிருக்காத மற்றும் அர்பணிப்புடன் கடமையாற்றும் ஊழியர்களுக்கு ஊழியர் ஊக்குவிப்பொன்றென ஒரு தடவையில் 02 சம்பள ஏற்றம் வழங்கும் செய்முறை ஒன்று கடைபிடிக்கப்பட்டு 2024 ஆண்டிற்காக உத்தியோகத்தர்களுக்கு 02 சம்பள | 2023 ஆம் நிதியாண்டில் கம்பனியினால் நெருங்கியிருந்த நிதி (வரிக்கு முன்னர் இலாபம்) மற்றும் உற்பத்திச் செயலாற்றுகை மீது 2024 ஆண்டிற்காக இரண்டு சம்பள ஏற்றங்கள் வீதம் செலுத்தப்பட்டிருந்ததென. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| ஏற்றங்கள் ஒரே தடவையில் வழங்கப்பட்டிருந்தது. எனினும், கம்பனியின் முழுமையான உரிமை அரசுக்கு உரித்தான பின்னர் அரச உத்தியோகத்தருக்குரிய சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுக்கு இணங்க சம்பள ஏற்றம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், 02 சம்பள உயர்வுகள் ஒரே தடவையில் செலுத்தும் செய்முறைக்காக விஷேட அங்கீகாரம் உரிய நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ளாமல் அங்கீகரிக்கப்பட்ட / அங்கீகரிக்கப்படாத சம்பளமின்றிய விடுமுறை பெற்றுக்கொள்ளாத ஊழியர்கள் 166 பேருக்கு கம்பனித் தலைவரின் அங்கீகாரத்தின் மீது மீளாய்வாண்டின் போது இரண்டு சம்பள ஏற்றங்கள் வீதம் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, மாதாந்தம் ரூபா 67,180 இற்கான தொகையொன்று சம்பள ஏற்றமென மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) திரிபோஷா கம்பனியின் அகவிதியின் படி பணிப்பாளர் சபையின் அமைப்பு 07 பேர்கள் அடங்கியிருந்ததுடன், அதற்குரிய பிரிவுகளை பிரதிநிதிப்படுத்தக் கூடியவாறு நியமனம் செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. அவ்வாறாயினும், சுகாதார அமைச்சிற்காக பிரிதிநிதி என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது நடைபெற்ற பணிப்பாளர் சபை 09 கூட்டங்களில் எந்த கூட்டத்திற்கும் பங்குபற்றியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு அனைத்து பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என. | பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்காக சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தின் பங்குபற்றலை அதிகரித்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திரிபோஷாவினை சுகாதார பாதுகாப்பு ரீதியாக களஞ்சியப்படுத்தலுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 69,875,428 இற்கான துருப்பிடிக்கா த களஞ்சியத் தொட்டிகள் (Stainless-Steel Storage Tanks) நிறுவப்பட்டிருந்ததுடன், அதற்குரிய பெறுகை செய்முறை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் | | |

பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.1(ஈ) பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் விலைகூறல் அழைப்புப் பதிவேட்டில் பதிவு செய்தல் மற்றும் விலைகூறலை மதிப்பாய்வு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் வழிகாட்டல் மற்றும் கண்காணிப்பின் கீழ் வெளி உசாத்துணையாளர்களின் உதவி பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்த போதிலும், பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.3.1 பிரகாரம் விலைகூறல் மதிப்பாய்வு உசாத்துணையாளருக்கு ஒப்படைக்கப்பட்டால் அது மேற்கொள்ளப்பட வேண்டியது தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் மேற்பார்வையில் மற்றும் வழிகாட்டலின் கீழ் காணப்பட வேண்டியதுடன், உசாத்துணையாளர்கள் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அங்கத்தவர்கள் அல்லாமல் இருக்க வேண்டும். அதேபோல், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் தமது குழுவின் முறையான அறிக்கை ஒன்றுடன் உசாத்துணையாளரின் அறிக்கை பெறுகை குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்கூறிய வழிகாட்டல்களுக்கு இணங்காமல் விலைகூறல் அழைப்புப் பதிவேடு தயாரித்தல் மற்றும் விலைகூறல் மதிப்பாய்விற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் தலைவர் என நியமனம் செய்யப்பட்ட அமைச்சின் சிவில் பொறியியலாளர் ஒருவருக்கு ஒப்பந்த வேலையின் வெளி உசாத்துணையாளர் என நியமனம் செய்யப்பட்டதுடன், அந்த உசாத்துணை கருமத்திற்காக திரிபோஷா கம்பனியினால் தடுத்து வைத்தல் வரி உட்பட ரூபா 1,007,608 தொகை உசாத்துணை கட்டணம் என செலுத்தப்பட்டிருந்தது. இந்த உசாத்துணை கட்டணம் சுகாதார அமைச்சுக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்படாமல் குறிப்பிட்ட சுகாதார அமைச்சிலிருந்து கிடைத்திருந்த அங்கீகாரத்தின் பிரகாரம் குறிப்பிட்ட உசாத்துணையாளரின் சேவையை பெற்றுக்கொண்டிருந்ததுடன், அந்த அங்கீகாரத்தின் மீது கடமை நேரத்தின் பின்னர் உசாத்துணை சேவை பெற்றுக்கொண்டிருந்தமையால் அவருக்கு நேரடியாக உசாத்துணை சேவைக் கட்டணம் செலுத்தப்பட்டது எனவும், கம்பனியினால் 2024 / 2025 மதிப்பீட்டு ஆண்டிற்காக நபருக்கு செலுத்திய அனைத்துக் கொடுப்பனவுகளும் மற்றும் கழிக்கப்பட்ட தடுத்து வைத்தல் வரி (WHT) தொடர்பாக விபரங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் RAMIS முறைமைக்கு உள்ளீடு செய்யப்பட்டுள்ளது எனவும், கம்பனியினால் உசாத்துணை சேவைகள் பெற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் அல்லது நபர்களுக்கு செலுத்தி கொடுப்பனவுகள் மேற்குறிப்பிட்ட முறையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவித்தல் குறிப்பிட்ட சேவை வழங்கிய நிறுவனங்கள் அல்லது நபர்களுக்கு திரிபோஷா கம்பனியின் மூலம் தடுத்தல் வரி சான்றிதழ் வழங்க வேண்டியிருந்ததெனவும், வேலைப் பெறுகைகள் (Works Contract) இற்காக விலைகூறல் மதிப்பாய்வுக் குழு உத்தியோகத்தர்களை உசாத்துணை சேவை அலுவல்களுக்காக பங்குபற்ற வைக்காமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறியியலாளருக்கு நேரடியாக செலுத்தியிருந்தது. அதேபோல், அந்த கருமத்திற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் தலைவர் என கடமையாற்றியதற்காக ரூபா 10,000 தொகையொன்று அந்த நபருக்கே செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.12.1 இற்கு இணங்க ஆக்கபூர்வமான போட்டித் தன்மையொன்று காணப்படவில்லை என தெளிவாக காணும் போது அதன்படி, கிடைக்கக்கூடிய விலைகூறல்களை ஏற்க மறுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், இந்த பெறுகைக்காக 04 நிறுவனங்களில் இருந்து விலைகூறல் சமர்ப்பித்திருந்த போதிலும், அவற்றின் 03 நிறுவனங்களின் அடிப்படைத் தகைமைகள் பரிசோதனையின் போது நிராகரிக்கப்பட்டிருந்ததுடன், மதிப்பீட்டில் காணப்பட்ட பெறுமதிகள் மற்றும் நிராகரிக்கப்பட்டிருக்காத ஒரே கூறுவிலையிடையே பொருண்மையான முரண்கள் காணப்பட்டமையால் அனைத்து விலைகூறல்தாரர்களுக்கும் அநியாயம் ஏற்படாத வகையில் மேற்கூறிய வழிகாட்டலின் படி நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் போட்டி விலையொன்று சமர்ப்பித்திருந்த ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு இந்த ஒப்பந்த வேலை சாட்டும் சந்தர்ப்பத்தை கம்பனி இழந்திருந்தது. | குறிப்பிட்ட வேலைப் பெறுகையின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 60 மில்லியன் தொகை எனவும், அதற்காக 04 விலைகூறல்தாரர்கள் முன்வந்திருந்ததுடன், அடிப்படை தகைமைகளை பரிசோதனையின் போது 03 விலைகூறல்தாரர்கள் நிராகரிக்கப்பட்டிருந்தவுடன், அதன்படி, விரிவான மதிப்பாய்வின் மூலம் தகைமை பெற்றிருந்த நிறுவனத்திற்கு விலை மீளாய்வொன்றின் மூலம் ஒப்பந்த வேலை வழங்கும் படி விலைகூறல் மதிப்பாய்வுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது எனவும், குறிப்பிட்ட ஒப்பந்த வேலைக்காக மீண்டும் அழைப்பதன் மூலம் கம்பனிக்கு ஏற்படக்கூடிய நிதிசார் நட்டம் மற்றும் விலை மீளாய்வின் மூலம் இணங்கியிருந்த கூறுவிலை ரூபா 69.87 மில்லியன் தொகை (ஆரம்ப விலைகூறலின் பெறுமதி ரூபா 79.63 மில்லியன்) ஆக காணப்பட்டமையால் பொறியியல் மதிப்பீட்டின் படி ரூபா 60 மில்லியனை மிகைத்திருந்தமையால் அனைத்து விடயங்களையும் கவனத்தில் எடுத்து கம்பனிக்கு நிதிசார் நட்டமொன்று ஏற்படாதவாறு குறிப்பிட்ட செயற்திட்டத்தின் முக்கியத்துவத்தை கவனத்தில் எடுத்து பணிப்பாளர் சபையினால் வழங்கியிருந்த இணக்கத்தின் மீது பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு குறிப்பிட்ட ஒப்பந்த வேலை வழங்கப்பட்டது என. | -மேற்படி- |
| (இ) | திரிபோஷா கம்பனியின் பொறியியல் மற்றும் சேவை முகாமையாளரினால் 2021 நவம்பர் மாதத்தில் தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 59,058,450 தொகைக்கான மொத்த | இந்த செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக கம்பனி நீண்ட காலம் முதல் எதிர்பார்த்த போதிலும், கம்பனியின் மூலதன ஏற்பாடுகளுக்காக தேசிய | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின பிரகாரம் செயற்பட |

கிரய மடிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு விலைகூறல்தாரர்களின் கூறுவிலைகளை மதிப்பாய்வு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்தக் கூறுவிலைகள் மற்றும் மொத்த கிரய மதிப்பீட்டுடன் இணக்கங் செய்தபோது 27 சதவீதம் முதல் 38.56 சதவீதம் வரை விலை முரணொன்று காணப்பட்டது. மேலும், இந்த ஒப்பந்த வேலைக்காக குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த விலைகூறல்தாரரின் மற்றும் தெரிவு செய்யப்பட்ட விலைகூறல்தாரரின் விலைகள் இடையே ரூபா 36,644,995 இற்கான அதாவது 46 சதவீத கணிசமான வித்தியாசம் ஒன்று மதிப்பாய்வு மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்டது. 2023 திசெம்பர் 08 திகதிய தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அறிக்கையின் படி 2021 நவம்பர் மாதத்தில் மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததெனவும், பின்னர் ஏற்பட்டிருந்த டொலரின் பெறுமதி அதிகரித்தலுடன் இறக்குமதி பண்டங்கள் மற்றும் ஏனைய சேவைகளின் விலைகள் அதிகரித்தல், விலைகூறல்தாரரின் கூறுவிலை அதிகரிப்பதற்காக காரணமாக இருந்ததெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் 2023 ஆண்டின் போது பெறுகை ஆரம்பிக்கப்பட்ட இந்த ஒப்பந்த வேலைக்காக 2021 ஆண்டில் பொறியியல் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 2024 ஆண்டு விலைகூறல்களை மதிப்பாய்வு மேற்கொள்ளல் பொருத்தமற்றது எனவும், அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.3 இற்கு இணங்க ஆரம்ப மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பின்னர் விலை கூறல்கள் அழைப்பதற்கு நியாயமான காலமொன்று எடுத்திருத்தல் பண வீக்கம் மற்றும் ஏனைய விடயங்களை கவனத்தில் எடுத்து மொத்த கிரய மதிப்பீடு நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். அவ்வாறாயினும், வழிகாட்டலின் படி செயற்படுவதற்கு பதிலாக ஒப்பந்த வேலையை வழங்குவதற்கு பாதீட்டுத் திணைக்களத்தினூக ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாத காரணத்தினால் இதனை செயற்படுத்த தாமதம் ஏற்பட்டதெனவும், அதன் காரணமாக கம்பனியின் உள்ளக நிதியங்களின் மூலம் பொதி செய்யும் பிரிவில் முன்னர் பொறுத்தப்பட்டிருந்த 03 Fiber தொட்டிகளை அகற்றி அதற்காக 03 கரையில் உருக்கு தொட்டிகள் பொறுத்துவற்காக தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டதெனவும், 2021 ஆண்டின் பொறியில் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் விலைகள் மற்றும் 2024 இல் விலைகூறல் அழைத்த சந்தர்ப்பத்தில் விலைகள் இடையே பாரிய விலை இடைவெளி காணப்பாடதுடன், தகைமையுடைய விலைகூறல்தாரர்களுடன் விலை தொடரபாக கலந்துரையாடல் நடாத்தி நிலவிய விலைக்களின் அடிப்படையில் விலைகூறல் மதிப்பாய்வுக் குழுவினால் குறிப்பிட்ட பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தது என.

வேண்டும்.

விலைகூறல்தாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்ட பின்னர் திருத்தப்பட்ட மொத்தக் கிரய மதிப்பொன்று தயாரிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட விலைகூறல்தாரின் கூறுவிலைகளை திருப்பி இணக்கஞ் செய்யப்பட்டிருந்தது. அதன்படி, மேற்கொள்ளப்பட்ட இணக்கம் திருத்திய கூறுவிலைகளின் படி ஒவ்வொரு விடயங்களுக்குமான முரண்கள் 30 சதவீதம் முதல் 932 சதவீதம் வரை காணப்பட்டது. மேற்கூறிய விடயங்களை கவனத்தில் எடுத்த போது உசாத்துணை மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு தமது பொறுப்புக்களை நிறைவேற்றியிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் படி நிதி அலுவலர் பதவியொன்று முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான பதவியொன்று தற்போது அவதானிக்கப்படாமையால் அந்தப் பதவி தேவைப்படாவிடின் தேவைப்பாட்டின் படி பதவியணியில் திருத்தங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 ஜனவரி மாதம் முதல் நிதி உத்தியோகத்தர் பதவி நிரப்பப்பட்டுள்ளதுடன், அதனை Payroll இல் நிறைவேற்று உத்தியோகத்தர் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன், பதவிப் பெயரை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். | தேவையான திருத்தங்களுக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஆ) | கம்பனியினால் 2016 ஆண்டில் நிருவாக விதிக் கோவை தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருந்த போதிலும், அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இதுவரை கிடைத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், கம்பனியினால் அதில் அடங்கியுள்ள சில அங்கீகரிக்கப்படாத சட்டங்கள் விதிகள் கடைபிடிக்கப்படுகின்றதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | நிருவாக விதிக்கோவை உட்பட கம்பனியின் அனைத்துப் பிரிவுகளும் அடங்கக்கூடியவாறு செயற்பாட்டுக் கைநூல் அரச தொழில் முயற்சித் திணைக்களத்திற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு இணங்க அனுப்பப்பட்டுள்ளது எனவும், அதற்குரிய மதிப்பாய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென அரச தொழில் முயற்சித் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டதென. | செயற்பாட்டுக் கைநூலுக்காக அரச தொழில் முயற்சித் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் வரை செயற்படுத்தக் கூடாது. |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஜனவரி 12 திகதிய இலக்கம் DMA/01-2019 இலக்கம் கொண்ட முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இற்கு இணங்க மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு தொடர்பான அறிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு தொடர்பான அறிக்கைளின் பிரதிகள் கால ரீதியாக நடாத்தப்படுகின்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கு சமர்ப்பிப்பதற்காக அறிவுரை வழங்கப்பட்டதென. | வருடந்த உள்ளகக் கணக்காய்வு திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டியதுடன், வழங்கப்படுகின்ற உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள் அல்லது அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச தொழில் முயற்சிகள் நெறிப்படுத்தல் தொடர்பான 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சி சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரச தொழில் முயற்சிகளுக்கான நிறுவனம்சார் வழிகாட்டல் கோவையின் 4.2(h) பந்தியின் பிரகாரம் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மூன்று மாதங்களுக்கு ஒன்று நடாத்த வேண்டியிருந்த போதிலும் திரிபோஷா கம்பனியினால் 2024 ஆண்டு தொடர்பாக 02 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தியிருந்தது. | 2024 ஆண்டு மூன்றாம் காலாண்டில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் பணிப்பாளர் சபையினால் கூட்டம் நடாத்தப்படக் கூடாது என அறிவுரை வழங்கப்பட்டமையால் நடாத்தப்படவில்லை எனவும், இந்த ஆண்டு முதல் குறைந்தளவு 04 கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | குறிப்பிட்டவாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |